

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரம் வார்டு எண் 32ல் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்கூடம் திறப்பு விழா மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் நகராட்சி தலைவர் எஸ்.சௌந்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர், டி.எம்.கதிர் ஆனந்த் கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர் ரவி, லோ.இரவிச்சந்திரன், கே.சீதாராமன், ஆர்.முருகேசன், நகர மன்ற உறுப்பினர்கள், நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தொழிலாளர்களுக்கு விரோதமான 4 தொகுப்பு சட்டங்கள் நடைமுறை!

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து நாடுதழுவிய ஆர்ப்பாட்டம்!

## திருச்சியில் நாளை நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை பொன்குமார் துவக்கி வைக்கிறார்!

சென்னை,நவ.28-

தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நான்கு தொகுப்பு சட்டங்களை ஒன்றிய மோடி அரசு நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. இது தொழிலாளர்களுக்கு ஒன்றிய அரசு இழைக்கும் மாபெரும் துரோகம் ஆகும். இதனை கண்டித்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நாடு அளவில் கண்டன போராட்டம் நடத்த உள்ளது. அதன் தொடக்கமாக நாளை (28.11.2025- வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இந்த போராட்டத்தை துவக்கி வைத்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவரும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் கண்டன உரையாற்றுகிறார்.

•தமிழ்நாட்டில் முன்மாதிரியாகவும், சிறப்பாகவும் செயல்படக்கூடிய கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு வாரியங்கள் கலையக்கூடிய பேரத்து உள்ளது.

• இந்தச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் தொழிலாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

• நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் தினக்கூலித் தொழிலாளர்கள் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

• விரும்பிய நேரத்தில் தொழிலாளர்களை முதலாளிகள் பணி நிக்கம் செய்ய முடியும்.

• ஆண்டு கணக்கில் உலகளாவிய போரட்டங்களுக்குப் பின்பு 8 மணி நேர வேலை சட்டம் கிடைத்தது. அது தற்போது 12 மணி நேரமாக உயர்த்தப் பட்டுள்ளது.

•எல்லா நிறுவனங்களிலும் பெண்கள் இரவில் பணியாற்றுவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

• நூறு தொழிலாளர்கள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே தொழிற்சங்கம் தொடங்க முடியும் என்பது தொழிற்சங்க உரிமையை மற்றும் தொழிலாளர்களின் உரிமையை மறுப்பதாகும்

போன்ற தொழிலாளர்களுக்கு விரோதமான இந்த சட்டத்தை திரும்ப பெற கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

28.11.2025 நாளை காலை 10 மணி அளவில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் பொறி.எஸ்.ஜெகதீசன் அவர்கள் தலைமை தாங்குகிறார்.

திருச்சி கிழக்கு மாவட்டத் தலைவர் ஆர்.ஜெயராம், தெற்கு மாவட்டத் தலைவர் எ.பொன்னுசாமி, வடக்கு மாவட்டத் தலைவர் சி.மணிவேல், மேற்கு மாவட்டத் தலைவர் டி.எ.மணி, மாநகர் கிழக்கு மாவட்டத் தலைவர் ஆர். கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். திருச்சி மாநகர் மாவட்டத் தலைவர் வி.சுப்பிர மணியன் வரவேற்று பேசுகிறார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் மாநில இளைஞரணித் தலைவர் வினோத் பொன்குமார், பொதுச் செயலாளர்கள் என்.சுந்தராஜ், ஜெகமுருகன், ஆர். மகேஸ்வரி, பொருளாளர் ஆர்.சேகர், இணைச் செயலாளர் ஏ.ஜெ.நாகராஜ், தொழிற்சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் கவிஞர் குருநாகலிங்கம், திருச்சி மாவட்ட தி.மு.க பொறியாளரணித் தலைவர் இ.தென்னரசு உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றுகின்றனர்.

# திண்டிவனம் நகராட்சியில் S.I.R. பணி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு!

திண்டிவனம் நவ 28–

திண்டிவனம் நகராட்சியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம்பதிவேற்றம் பணியினை விழுப்புரம் வடக்கு மாவட்ச்செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம் வழங்கும் பணி நடைபெற்று படிவங்கள் பதிவேற்றும் பணிவிழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிதிண்டிவனம் நகராட்சியில் நடைபெற்று வருகிறது.

திண்டிவனம் நகராட்சியில் உள்ள 6,16,27, ஆகிய வார்டுகளில் உள்ள பாகம் எண்கள் 85,91,96,105 பசுவத்தம்மன் கோவில் தெரு கரியான் தெரு, ரோஷனை பாட்டை, சஞ்சிவிராயன்பேட்டை, புது மசூதி தெரு, நேரு வீதி, பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில்வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர கணக்கீட்டு படிவம் வழங்கும் பணி நடைபெற்றுபதிவேற்றம் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணியை விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பணிகளை தி.மு.க. நிர்வாகிகள், பாகம் முகவர்கள். டிஜிட்டல் ஏஜென்ட், நிர்வாகிகள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினார் .

இதில்திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகரஅவைத்தலைவர் ரவிச்சந்திரன், முன்னாள் நகர செயலாளர் கபிலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபு, திண்டிவனம் நகர மற்றும் உறுப்பினர்கள் ஷபியுல்லா, தில்ஷாத் பேகம் அக்பர், மாவட்ட வர்தகர் அணி துணை அமைப்பாளர் ஆடிட்டர் பிரகாஷ், நகர துணை செயலாளர் தாஜுதீன், நிர்வாகிகள் ஏழுமலை, முஸ்தபா, நத்தர்பாஷா, பாரூக், மோகன், சுப்பிரமணி, ராஜேந்திரன், ரஷித் கான், தயாளன், ஐயப்பன், குமரவேல், டாக்டர் சூர்யா பிரகாஷ், பாலாஜி, கலீல்,குமார், கோபிநாத், இம்தாதுல்லா, கொடியம் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்று,வள்ளியூரில் உள்ள நெல்லை கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில் பணகுடி,ராதாபுரம், கடம்பன்குளம்,கலந்தபனை,வள்ளியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அ.தி.மு.க,த.வெ.க கட்சியினர் சுமார் 250 க்கும் மேற்பட்டோர் கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் தொகுதி பார்வையாளர் சிவராஜ், ஜோசப் பெல்சி, கோசிஜின், சேதுராமலிங்கம், ஆதி பரமேஸ்வரன், முத்துக்குமார், கவுன்சிலர் கோபி கோபால கண்ணன், ஹரிதாஸ், வைகுண்டராஜன் உள்ளிட்ட தி.மு.க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி மேற்கு ஒன்றியம் முந்தல் நாலு புளியமரம் SIR வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் பணியில் போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் லட்சுமணன் ஆய்வு செய்தார் உடன் முந்தல் ஆதி, கருப்பையா மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

### ஆளுநர்களின் அதிகார எல்லை குறித்த முதல்வரின் உறுதியான முடிவு!

# அரசியல் சட்டத் திருத்தமே காலத்தின் கட்டாயம்!




இந்த ஆண்டு (2025) நவம்பர் திங்கள் இருபதாம் நாள் இந்திய உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் ஐயப்பாடுகளை உள்ளடக்கிய கடிதத்திற்கான விளக்கங்களை அளித்துள்ளார்கள். சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கான ஒப்புதல் வழங்குவதில் குடியரசுத் தலைவருக்கும் மாநில ஆளுநர்களுக்கும் காலநிர்ணயம் செய்யவியலாது என விளக்கமளித்துள்ளார்கள்.

தலைமை நீதிபதியால் அளிக்கப்பட்ட இந்த விளக்கம் கடந்த ஜூன் மாதம் எட்டாம் தேதி உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் அரசியல் சட்டத்தின் 142வது பிரிவின்கீழ் வழங்கியத் தீர்ப்பை கட்டுப்படுத்தாது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். எனினும் இந்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சமீபத்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வழங்கிய குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கான விளக்கத்திற்கு முரண்படுகிறது.

உச்சநீதிமன்றம் இந்த ஆண்டு ஏப்ரல் எட்டாம் தேதி வழங்கிய தீர்ப்பு, ஆளுநர்களுக்கும் குடியரசுத் தலைவருக்கும் காலவரையறை நிர்ணயம் செய்திருப்பதோடு, அந்தக் காவரையறைக்குள் ஆளுநர்களோ, குடியரசுத் தலைவரோ மசோதாக்கள் மீது முடிவெடுக்கவில்லையானால், அந்த மசோதாக்கள் ஆளுநர்கள்,குடியரசுத் தலைவர் ஆகியவர்களின் ஒப்புதல் பெற்றதாகவே (Deemed to be Approved) சட்டப்படி கருதப்படும் என தீர்ப்பளித்துள்ளார்கள். இந்தத் தீர்ப்பை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியால் குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கான விளக்கம் கட்டுப்படுத்தாது எனவும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியே அறிவித்துள்ளார்கள்.

எனினும், இந்திய அரசியல் சட்டத்தில் (constitution of India) ஆளுநர்களுக்கும் குடியரசுத் தலைவருக்கும் மசோதாக்களுக்கான ஒப்புதல் வழங்குவதில் காலவரையறை நிர்ணயிக்கப்படாத காரணத்தினால் உச்சநீதிமன்றம் காலவரையறையை நிர்ணயிக்கவியலாதென விளக்கமளித்ததோடு, ஒப்புதலுக்கான காலவரையறையை நிர்ணயம் செய்யவேண்டுமெனில், அதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உண்டு என தற்பொழுது ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி (குடியரசு தலைவரின் வினாக்களுக்கு விளக்கமளித்த உச்சநீதிமன்ற நீதிபதி) மேலும் விளக்கமளித்த செய்தி, 24.11.2025 ‘இந்து’ பத்திரிக்கையில் வெளியாகியுள்ளது.

2025ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் எட்டாம் நாள் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கும் 20.11.2025 ஆம் நாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் வினாக்களுக்கு அளித்த விளக்கமும் அதனைத் தொடர்ந்து, உச்சநீதிமன்ற நீதிபதி ஓய்வு பெற்ற பின்னர் 24.11.2025 ஆம் தேதி கூறிய விரிவான விளக்கத்திற்கும் முரண்பாடு இருப்பது தெளிவாகவே தெரிகிறது. இந்த முரண்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்காவிடில், மசோதாக்கள் மீது ஆளுநர்களும், குடியரசுத் தலைவரும் முடிவெடுக்கும் காலவரையறை என்பதிலும் அதையொட்டிய முடிவுகளிலும் குழப்பங்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

இந்தக் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலேதான் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வரும் இந்த சட்டப்போராட்டத்தை முன்னெடுத்த தமிழக முதல்வர் சட்டமசோதாக்கள்மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும்வரை ஓயமாட்டோம் என திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள்.

தமிழக முதல்வரின் இந்த முன்னெடுப்பு முயற்சி இந்திய ஒன்றியத்திலுள்ள மாநில முதல்வர்களுக்கு தங்களுடைய மாநில உரிமைகளை பாதுகாப்பதற்கும் காலதாமதத்தை தவிர்ப்பதற்கும் பெரிதும் பயன்படும். இந்திய அரசியல் சட்டம் ஜனநாயக குடியரசு ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே, பல்வேறு அரசியல் கட்சிகள் கொள்கைகளால் மாறுபட்டு உருவாவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பதை மறுக்கவியலாது. இந்தச் சூழ்நிலையில், ஒன்றியத்தில் ஆட்சிப்பொறுப்புக்கு வரும் குறிப்பிட்ட அரசியல் கட்சிதான் மாநிலங்களிலும் ஆட்சி அமைக்கும் என்று அறுதியிட்டு உறுதிப்படுத்த இயலாது.

எனவே, வேறுபட்ட சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும் கொண்ட கட்சிகள் மாநிலங்களில் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் நிரம்ப உண்டு. இந்த நிலைமை இந்தியா ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலைப்பெற்று, இந்திய அரசியல் சட்டம் அமல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது. ஒன்றியத்தில் ஆட்சி அமைத்திருக்கும் அரசியல் கட்சிக்கு முரண்பட்ட கொள்கை கோட்பாடுகளை உள்ளடக்கிய மற்றொரு அரசியல் கட்சி மாநிலத்திலே ஆட்சி அமைக்குமேயானால், ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்ற ஒன்றிய அரசு தங்களுக்குச் சார்புடைய ஆளுநர்களை மாநிலங்களில் நியமிக்க வாய்ப்புகள் உண்டு. அப்படித்தான் ஆளுநர்களை நியமித்திருக்கிறார்கள்.

எனவே, ஆளுநர்கள் மாநில அரசுக்கு எதிரான நிலைப்பாட்டின் காரணமாக மாநில அரசுகளின் இயல்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், காலதாமதப்படுத்துவதற்கும் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் நிரம்ப உண்டு. அத்தகைய நடவடிக்கைகளைத்தான் தற்பொழுது தொடர்ந்து செய்துக்கொண்டிருக்கிறார்கள். இந்திய ஒன்றியத்தில் சட்டப்படி அரசியல் கட்சிகள் தொடங்குவதற்கு தடையில்லை. இதில் பதிவு செய்வதற்கும் (Registration), அங்கீகரிப்பதற்கும் மட்டும்தான் (Recognition) நிபந்தனைகள் உண்டு.

இத்தகைய சூழ்நிலையில், மாநிலங்களின் உரிமைகள் எந்த அரசியல் கட்சி ஆட்சியிலிருந்தாலும் பாரபட்சமின்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமேயானால், ஆளுநர்கள், குடியரசுத் தலைவர் ஆகியவர்கள் மசோதாக்கள் மீதான ஒப்புதலுக்கு காலநிர்ணயம் செய்ய வேண்டியதென்பது கட்டாயமாகும். காலநிர்ணயம் செய்யப்படாத காரணத்தினால்தான், எதிர்க்கட்சிகள் ஆட்சியிலுள்ள மாநிலங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கும், ஆளுநர்களுக்கும் தொடர்ந்து முரண்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் உருவாகிக்கொண்டே இருக்கிறது. இதற்கு நிரந்தரமான தீர்வு வேண்டுமெனில், தமிழக முதல்வர் திட்டவட்டமாக அறிவித்திருப்பதைப் போல இதற்கான அரசியல் சட்ட திருத்தம் என்பது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமை வலிவிழந்து போகாமல் பாதுகாக்கும் கருவியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்திய அரசியல் சட்ட நிர்ணய சபை (Constituent Assembly) மாநில ஆளுநர்களும், குடியரசுத் தலைவரும் காலவரையறையின்றி மசோதாக்களை கிடப்பிலே போட்டு வைக்க வாய்ப்பளிக்கும் எண்ணத்தோடுதான் காலவரையறை செய்யவில்லை என்று யாராவது யூகிக்கமுடியுமா? என்பதுதான் இன்றைய அரசியல் சட்டத்தை ஆய்வு செய்வோரின் கேள்வியாகும்.

டாக்டர்.அம்பேத்கர் தலைமையில் அரசியல் சட்டத்தை வார்ப்பித்த தேசியத் தலைவர்களும், சட்ட வல்லுநர்களும், ஆளுநர்கள், குடியரசுத் தலைவர் ஆகிய உயர்ந்த பதவிக்கானவர்களை நியமிப்பதில் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதைவிட அரசியல் சட்டத்தினுடைய உண்மையான நோக்கத்தை (Sprit of the Constitution) நிறைவேற்றும் வகையில் நடுநிலையோடு செயல்படுவார்கள் என்ற உயர்ந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் காலவரையறை நிர்ணயிக்கப்படவில்லை.

ஆனால், இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், கால மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்குச் சிந்தனையின் அடிப்படையில், அரசியல் சட்டத்தில் காலவரையறையை நிர்ணயம் செய்யும் அரசியல் சட்டத் திருத்தம் (Constitutional Amendment) காலத்தின் கட்டாயம் என்பதோடு இந்தத் திருத்தம் இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமையையும் வலுப்படுத்தும் என்பதோடு எதிர்க்கட்சிகள் ஆட்சியில் அமர்ந்திருக்கும் மாநில அரசுகளுக்கும் தொடர்புடைய மாநில ஆளுநர்களுக்குமான முரண்பாடுகளும் முட்டுக் கட்டைகளும் நிரந்தரமாகத் தடுக்கப்படும்!

மாநில ஆளுநர்களின் நியமனங்கள் குறித்தும், அவர்களது பணிகள் குறித்தும், இந்திய அரசியல்சட்ட நிர்ணய சபையில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

(Constituent Assembly Debates Book No:3 Page No:431&432)

குறிப்பாக 1949 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் நாள் மாநில ஆளுநர்கள் நியமனங்கள் மற்றும் அதிகாரங்கள் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கிய அரசியல் சட்ட நிர்ணய சபை உறுப்பினர் சென்னையைச் சார்ந்த மிகச்சிறந்த வழக்கறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் தெரிவித்தபடி, மாநில ஆளுநர்கள் இந்திய அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்ட பதவியில் நியமிக்கப்பட்டவர்களாகும். எனவே அவர்கள் மாநிலங்களுக்கான ஆற்றல்மிக்க ஆலோசகர்களாகவும், பிரச்சினைகள் தீவிரமடையாமல் சுமூகமாகவும், அமைதியாகவும் தீர்க்கும் ஆற்றல் பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். மேலும் இந்த நோக்கங்களை முறையாக நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில், மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்றவர்களைத்தான் ஆளுநர்களாக நியமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(The central fact to be remembered is that the Governor is to be a Constitutional head, a sagacious counselor and advisor to the Ministry, one who can throw oil over trubbled waters. If that is the position, to be occupied by the Governor, chosen by the Government of India, presumably with the consent of the Provincial Government, is likely to discharge his functions better............. Page No:431&432)

இந்திய அரசியல் சட்ட நிர்ணய சபையில், புகழ்பெற்ற சென்னை வழக்கறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள்கருத்துப்படிமாநிலஆளுநர்கள்நியமிக்கப்படுவதில் குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆட்சிப்பொறுப்பில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஆளுநர் ரவியைப் போன்றவர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள். எனவே அவர்களின் நடவடிக்கைகள் மாநில அரசுகளுக்கு முரண்பட்டதாகவே பெரும்பாலும் இருப்பதை நேரடியாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால் தொடர்புடைய மாநில மக்களுக்குச் சென்றடைய வேண்டிய திட்டப்பயனும், சட்டப்பாதுகாப்பும் உரிய காலத்தில் சென்றடைவதில்லை. மேலும், ஆளுநர்களின் முரண்பட்ட நடவடிக்கைகளுக்கு நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் பெறுவது காலதாமதத்தை உருவாக்கும் என்பதோடு மக்களுக்கு உரிய பயனும், பாதுகாப்பும் சென்றடையாமல் போய்விடும். எனவே இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சரின் கோரிக்கைப்படி, அரசியல் சட்டத்திருத்தம்தான் (Constitutional Amendment) தீர்க்கமான ஒரே தீர்வாகும்.